Appenzell Ausserrhoden

# எனக்கு முடிவெடுப்பதற்கு உரிமையுள்ளது

## நிச்சயதார்த்தம், திருமணம், விவாகரத்து



நான் முடிவெடுப்பேன்.

## கட்டாயப்படுத்தும் நிலைமை என்றால் என்ன?

கட்டாயப்படுத்துவது வித்தியாசமான நிலைமைகளின்போது ஒரு உறவில் ஏற்படலாம்: இளம் ஆண்கள் மற்றும் பெண்களைப் பொறுத்தவரை இளம் பிராயத்தில் மற்றும் அவசரமாக குடும்பத்தால் திருமணம் செய்து வைக்கப்படலாம். இதனால் இள வயதினர் தாம் விரும்பாதவரைத் திருமணம் செய்து கொள்ளுமாறு அல்லது அவர்கள் காதலிப்பவரைக் கைவிடுமாறு வற்புறுத்தலுக்கு உள்ளாகின்றனர்.

## கட்டாயத் திருமணம் என்றால் என்ன?

கட்டாய திருமணம் என்றால், ஒருபகுதி அல்லது இருபகுதியினரையும் அவர்களின் விருப்பத்திற்கு எதிராக கட்டாயப்படுத்தி தம்பதிகளாகச் சேர்த்து வைப்பதாகும். வழமையாக கட்டாயத் திருமணம் உளரீதியாக, அதாவது உளரீதியான வன்முறையுடன் தொடர்புபட்டுள்ளதுடன், ஒருவிதமான வீட்டு வன்முறையையும் தோற்றுவிக்கின்றது. கட்டாயத் திருமணம் மனிதஉரிமைக்கு எதிரான மீறலாக உள்ளதுடன் சுவிசில் சிவில்- மற்றும் குற்றச்செயலாக தண்டனை தீர்க்கப்படும்.

## ஒரு கட்டாய தாம்பத்தியம் என்றால் என்ன?

ஒரு கட்டாய தாம்பத்தியம் என்றால், நபர்கள் அவர்களது தடைகள் அல்லது வற்புறுத்தும் சூழ்நிலை காரணமாக, விசேடமாக குடும்பத்தால், முன்பு செய்யப்பட்ட திருமணத்தை அவர்களது சொந்த விருப்பத்திற்கு எதிராக தொடர்ந்தும் நிலைநிறுத்தக் கட்டாயப்படுத்துவதாகும். நபர்கள் பிரிவதற்கு அனுமதிக்கப்படாததினால், முன்பு ஒரு காலத்தில் சொந்த விருப்பில் திருமணத்தைச் செய்திருப்பினும், ஒரு கட்டாய தாம்பத்தியத்தில் வாழ்கின்றனர், தம்பதிகளில் ஒருவரோ அல்லது இருவருமோ குறைந்த வயதினராக இருப்பின் சுவிசில் திருமணம் செய்வதற்கு அனுமதியில்லை. வெளிநாட்டில் குறைந்த வயதில் செய்யப்பட்ட திருமணம் சுவிசில் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**கட்டாயப்படுத்தும் நிலையை பெண்களும் ஆண்களும் சந்திக்கின்றனர்**

# நீங்களோ அல்லது பாதிக்கப்படும் நபர்களோ எங்கு உதவியைப் பெறலாம்?

## பிரதேச ஆலோசனை- மற்றும் தொடர்பு நிலையங்கள்

- பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவி | **071 227 11 00 | info@ohsg.ch | www.ohsg.ch**
- குடும்பத்திற்கான ஆலோசனை நிலையம | **071 228 09 80**
  **info@familienberatung-sg.ch | www.familienberatung-sg.ch**
- பிள்ளைகள் பாதுகாப்பு நடுநிலையம் | **071 243 78 02**
  **invia@kszsg.ch | www.kszsg.ch**
- பெண்கள் விடுதி | **071 250 03 45 | info@frauenhaus-stgallen.ch**
  **www.frauenhaus-stgallen.ch | 24 h**
- மாநில பொலிஸ் | **071 343 66 66 | Info.KAPO@ar.ch | 24 h**

## துறைசார் நிலையங்கள் மற்றும் தகவல் தளங்கள்

- துறைசார் நிபுணத்துவம் வாய்ந்த தளம் மற்றும் ஆலோசனை | **www.zwangsheirat.ch**
- கலாச்சாரங்களுக்கு இடையே ஏற்படும் முரண்பாடுகளுக்கான நம்பிக்கை நடுநிலையம்
  **www.tikk.ch**

## வலைத்தொடர்பு மற்றும் தொடர்புபடுத்தல்

Appenzell Ausserrhoden ZARtwerk என்பது கட்டாயத் திருமணத்துக்கு எதிரான திட்டம், இது கட்டாய திருமணத்திற்கு எதிராக போராடும் மத்திய அரசின் நிகழ்ச்சித் திட்ட அடிப்படையில் குடிவரவாளர்களுக்கான அரச செயலர் ளுநுஆ மற்றும் சுவிஸ் மத்திய திணைக்கள பெண்கள் மற்றும் ஆண்களின் சமத்துவத்தைப் பேணும் அலுவலகத்துடன் ஒன்றுசேர்ந்து செயற்படுத்தப்படுகின்றது.

- Appenzell Ausserrhoden ZARtwerk கட்டாயத் திருமணத்துக்கு எதிரான வலைத்தொடர்பு, இதுகுறித்த தகவல்களை கீழுள்ள இணையத்தளத்தில் காணல-ாம்: www.ar.ch/zartwerk
- கட்டாய திருமணத்துக்கு எதிராகப் போராடும் மத்திய அரச திட்டம், பல்வேறு மொழிகளில் கீழுள்ள இணையத்தளத்தில் காணலாம்:
  www.gegen-zwangsheirat.ch

## கட்டாய திருமணம் அல்லது கட்டாய தாம்பத்தியம்?

உங்கள் சூழலில் எவராவது, அவர் விரும்பாத ஒருவரை திருமணம் செய்யுமாறு வற்புறுத்தலுக்கு உள்ளாகிறார் என்ற சந்தேகம் உள்ளதா அல்லது அவ்வாறு நீங்கள் அறிந்து கொண்டீர்களா? நீங்களாகவே உங்களைக் கேட்டுக்கொள்ளுங்கள், உங்களுக்கு எவராவது ஒரு தாம்பத்தியம் பிரச்சினையாக உள்ளது அல்லது வன்முறை நிகழ்கின்றது, அவர்களைப் பிரிக்க அனுமதியில்லை என்று கூறினால் நீங்கள் என்ன செய்வீர்களென?

## கட்டாய வற்புறுத்தலுக்கு உள்ளாகியுள்ள நபருக்கு சிறப்பான முறையில் இவ்வாறு நீங்கள் உதவலாம்:

- அவசரமாக செயற்பட வேண்டாம். முதலில் ஒரு துறைசார் நிலையத்திடம் ஆலோசனை பெறுங்கள். அவர்கள் இரகசியம் காப்பதுடன் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் தெரிந்து கொள்ளாமலும் உதவுவார்கள்.
- பாதிக்கப்பட்ட நபரோடு கதைத்தபின்பு மட்டுமே செயலில் இறங்குங்கள், அத்துடன் அவரது விடயத்தை இரகசியமாக வைத்திருப்பதாக உறுதியளியுங்கள்.
- உடனடியான பாதிப்பு இருக்குமானால் பெண்கள் விடுதியில் தங்கவைத்தல் அல்லது இளையோரை Schlupfhuus ல் பதிவுசெய்தல். இதன்போது பொலிசார் உங்களுக்கு மேலதிக உதவிகளை வழங்குவார்கள்.

- விடுமுறைக்கு முன்பாக அதிக சந்தர்ப்பங்களில் பாதிக்கப்படும் நிலையை நீங்கள் கவனத்தில் எடுங்கள்.
- தொழிலகத்தில் அல்லது பாடசாலையில்: பாதிக்கப்பட்ட நபர் தொழிலகத்தில் அல்லது பாடசாலையில் இருந்து தொலைபேசியில் கதைப்பதற்கு ஒழுங்கு செய்து கொடுங்கள். இப்படியானவர்களுக்குப் போதுமான நேரத்தை வழங்குங்கள், ஒரு துறைசார் நிலையத்தில் ஆலோசனைக்கான தவணையைப் பெறுவதற்கு இது தேவைப்படும்.

- அத்துடன் மிகவும் முக்கியமானது: துறைசார் நிலையங்களுக்குச் செல்லும்போது, பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களையோ அல்லது சூழலில் உள்ள நபர்களையோ அழைத்துச் செல்லாதீர்கள்.


Appenzell Ausserrhoden

Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

Netzwerk gegen Zwangsheirat | www.ar.ch/zartwerk

Design: www.tisato-sulzer.com